**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**<u>காணொளிகாட்சி விசாரணை (Video Conference)</u>**

**<u>ஆணை நாள்: 04.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

……………

**<u>வழக்கு எண். SA11340/F/2024</u>**

திரு பெ. பழனியப்பன் ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
கோட்டப்பொறியாளர்,
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலைத் துறை, க(ம)ப,
திண்டுக்கல் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

******

## <u>ஆணை</u>

இவ்வழக்கு ஏற்கனவே 26.02.2025 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களை ஒரு வார காலத்திற்குள் உரிய சான்றொப்பமிட்டு வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இந்நிலையில், மனுதாரர் ஆணையத்தின் ஆணை நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவித்து 23.05.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். அக்கடிதத்தின் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.பெ.பழனியப்பன் அவர்கள் காணொளி விசாரணைக்கு ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.கே.பி.சங்கர், பொதுத் தகவல் அலுவலர் மற்றும் கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, கட்டுமானம்

மற்றும் பராமரிப்பு, திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் அழைப்பாணை தனக்கு தாமதமாக கிடைக்கப் பெற்ற காரணத்தால் தொலைபேசி மூலம் ஆணையத்தில் ஆஜரானார்.

2. மனுதாரர் 20.12.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திண்டுக்கல் கோட்டத்திற்கு உட்பட்ட உட்கோட்டங்களில் 2022-2023 மற்றும் 2023-2024 நிதி ஆண்டுகளில் CRIDP திட்டத்தின் கீழ் எத்தனை வேலைகள் சாலை புதுப்பித்தல் (Renewal) பணி எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது மற்றும் செய்ய வேண்டி உள்ளது. ஒவ்வொரு வேலைக்கும் உரிய மதிப்பீடு நகல் தொடர்பான தகவல்களை 2 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 12.01.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 27.01.2024 நாளிட்ட பிரிவு 19(**1**)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் 26.08.2024 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் தான் கோரிய தகவல்களுக்குப் பதிலாக என்னை ஏமாற்றும் நோக்கத்துடன் சம்பந்தமில்லாத வத்தலகுண்டு-கெங்குவார்பட்டி சாலையில் காய்ந்த மரக்கிளைகள் வெட்டியதற்காக தகவல்களை வழங்கியுள்ளார் தான் பிரிவு 6(1)இன் கீழ் கோரிய தகவல்களுக்குப் பதிலாக தவறான தகவல்கள் வழங்கிய பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு முழுமையான தகவல்களைப் பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள தகவல்களை ஏற்கனவே கடித எண் 711/2025/இவஅ-1, 12.05.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரர் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான தகவல்களை ஒரு வார காலத்திற்குள் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் ஆணையினை மதிக்காமல், மனுதாரர் பிரிவு 6(1)இன் கீழ் கோரிய தகவல்களுக்குப் பதிலாக மனுதாரரை ஏமாற்றும் நோக்கத்துடன் சம்பந்தமில்லாத வத்தலகுண்டு-கெங்குவார்பட்டி சாலையில் காய்ந்த மரக்கிளைகள் வெட்டியதற்காக தகவல்களை வழங்கியுள்ளது தெரிய வருகிறது. ஆணையம் அப்பொதுத் தகவல் அலுவலரின் இச்செயலை கண்டிக்கிறது. எனவே, இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் வழங்கி கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***ஆணையத்தின் 26.02.2025 ஆணையினை மதிக்காமல், மனுதாரர் பிரிவு 6(1)இன் கீழ் கோரிய தகவல்களுக்குப் பதிலாக மனுதாரரை ஏமாற்றும் நோக்கத்துடன் சம்பந்தமில்லாத வத்தலகுண்டு-கெங்குவார்பட்டி சாலையில் காய்ந்த மரக்கிளைகள் வெட்டியதற்காக தகவல்களை வழங்கியுள்ளது தொடர்பாக திரு. கே.பி, சங்கர், பொதுத் தகவல் அலுவலர் மற்றும் கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை,***

*கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.*

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA11340/F/2024**

**பெறுநர்**
பொது தகவல் அலுவலர்,
கோட்டப்பொறியாளர்,
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலைத் துறை, க(ம)ப,
திண்டுக்கல் மாவட்டம்.

**மனுதாரர்**
திரு பெ. பழனியப்பன், த/பெ பெரியசாமி,
106, முத்துராஜா தெரு,
தென்கரை, பெரியகுளம் - 625 601.
தேனி மாவட்டம்.

Copy to: Judgement File/ Spare.
JE / PA 05.06.2025.